# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## நிலையறி பரீட்சை – 2021

தரம் 9 வரலாறு நேரம் -2 மணித்தியாலங்கள்

### பகுதி I

சரியான விடையைத் தெரிவு செய்க.

1. கீழைத்தேசத்திற்கு வருகை தந்த ஒல்லாந்தர், தலைமையகத்தினை நிறுவிய தீவையும் நகரத்தினையும் தருகின்ற விடையைத் தெரிவு செய்க.
   (1) ஜாவாத் தீவு – பத்தேவியா
   (2) சுமாத்திரா தீவு – மேடென்
   (3) ஜாவாத் தீவு – சுரபாயா
   (4) சுமாத்திரா – பகன்பரு

2. கி.பி.1602 ஆம் ஆண்டு ஜோரிஸ்வான் ஸ்பில் பேர்ஜன் என்ற ஒல்லாந்துத் தளபதி இலங்கையில் வந்திறங்கிய துறைமுகம் எது?
   (1) காலி
   (2) திருகோணமலை
   (3) மட்டக்களப்பு
   (4) கொழும்பு

3. கி.பி 1638 ஆம் ஆண்டு ஒல்லாந்தருடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட கண்டி மன்னன் யார்?
   (1) முதலாம் விமலதர்ம சூரியன்
   (2) சௌரத்
   (3) இரண்டாம் விமலதர்ம சூரியன்
   (4) இரண்டாம் இராஜசிங்கன்

4. இலங்கையின் பிட்டிகல் கோறளையில் கறுவா உரிப்பதற்கு ஒல்லாந்தருக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கிய கண்டி மன்னன் யார்?
   (1) முதலாம் விமலதர்ம சூரியன்
   (2) சௌரத்
   (3) இரண்டாம் விமலதர்ம சூரியன்
   (4) இரண்டாம் இராஜசிங்கன்

5. இலங்கையில் உரோமன் டச்சுச் சட்டத்தை அறிமுகப்படுத்திய ஐரோப்பிய இனத்தவர் யார்?
   (1) ஒல்லாந்தர்
   (2) பிரான்சியர்
   (3) பிரித்தானியர்
   (4) போர்த்துக்கேயர்

6. மேலைத்தேச, கீழைத்தேச வர்த்தகப் பாதையின் மத்திய நிலையமாக அமைந்திருந்த நாடு எது?
   (1) இந்தியா
   (2) இலங்கை
   (3) இந்தோனேசியா
   (4) சீனா

7. இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றிய பிரித்தானியரின் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி அப்பிரதேசங்களில் வரியை அறவிடுவதற்கு நியமித்த சென்னை அதிகாரிகள் யார்?
   (1) அவுமில்தார்
   (2) முதலியார்
   (3) விதானை
   (4) கலெக்டர்

8. இலங்கையின் முதலாவது பிரித்தானிய ஆளுநர் யார்?
   (1) பிரட்டிக் நோர்த்
   (2) றொபேட் பிறவுண்றிக்
   (3) தோமஸ்மெயிற்லண்ட்
   (4) ஆளுநர் டொரிங்டன்

9. கண்டி இராசதானியின் இறுதி மன்னன் யார்?
   (1) முதலாம் விமலதர்ம சூரியன்
   (2) ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்
   (3) இரண்டாம் விமலதர்ம சூரியன்
   (4) இராஜாதி இராஜசிங்கன்

10. கண்டி இராச்சியம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஆளுநர் தோமஸ் மெயிற்லண்ட் நியமித்த உத்தியோகஸ்தர் யார்?
   (1) மக்டோவல்
   (2) மியுரன்
   (3) ஜோன் டொயிலி
   (4) முத்துச்சாமி

11. 1818 ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது சுதந்திர போராட்டம் ஊவா வெல்லசப் பிரதேசத்தில் ஆரம்பித்த போது அக் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியவர் யார்?
   (1) கெப்பட்டிபொல நிலமே
   (2) மடுகல்லே திசாவை
   (3) பூட்டாவே ரட்டேரால
   (4) உடகம்பஹ நிலமே

12. பிரித்தானியரால் இலங்கையில் முதன்முதல் வர்த்தக நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட பயிர் எது?
   (1) தேயிலை
   (2) இறப்பர்
   (3) கோப்பி
   (4) சிங்கோனா

13. இலங்கை மக்களுக்கு சர்வசனவாக்குரிமையை வழங்கிய அரசியல் யாப்பு எது?
   (1) கோல்புறூக் அரசியல் யாப்பு
   (2) டொனமூர் அரசியல் யாப்பு
   (3) சோல்பரி அரசியல் யாப்பு
   (4) மனிங் அரசியல் யாப்பு

14. இலங்கையின் உலர் வலயத்தில் அரசுக்கழகக் காலத்தில் விவசாயக் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்த தலைவர் யார்?
   (1) S.W.R.D பண்டாரநாயக்கா
   (2) C.W.W கன்னங்கரா
   (3) டட்லி சேனநாயக்கா
   (4) D.S சேனநாயக்கா

15. இலங்கையில் பிரம்மஞான சங்கம் நிறுவப்படக் காரணமாக இருந்தவர் யார்?
   (1) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
   (2) மீகெட்டுவத்த குணானந்த தேரர்
   (3) அநகாரிக தர்மபால
   (4) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்

16. இந்துக் கல்விச் சபை,சைவபரிபாலன சபை என்பவற்றை அமைத்து இந்து சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்திய தலைவர் யார்?
   (1) சேர். பொன் இராமநாதன்
   (2) சேர். பொன் அருணாசலம்
   (3) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
   (4) சு. நடேசு ஐயர்

17. பிரான்சியருடைய கீழைத்தேச வர்த்தக மையங்களில் ஒன்று எது?
   (1) சென்னை
   (2) மும்பை
   (3) பாண்டிச்சேரி
   (4) கோவா

18. இந்தியாவில் மொகலாயப் பேரரசை ஸ்தாபித்தவர் யார்?
   (1) பாபர்
   (2) அக்பர்
   (3) ஜகாங்கீர்
   (4) சாஜஹான்

19. இந்திய சுதந்திர போராட்டத்தின் போது பாகிஸ்தான் என்னும் வேறொரு நாட்டை உருவாக்குவதற்கான இயக்கமொன்றை முன்னெடுத்துச் சென்ற தலைவர் யார்?
   (1) ஜவகர்லால் நேரு
   (2) மொகமட் அலி ஜின்னா
   (3) பாலகங்காதர திலகர்
   (4) சுரேந்திரநாத் பெனர்ஜி


20. இந்திய தேசிய சங்கத்தின் முதல் தலைவர் யார்?
   (1) W.C. பெனர்ஜி
   (2) தாதாபாய் நவ்ரோஜி
   (3) சுரேந்திரநாத் பெனர்ஜி
   (4) பாலகங்காதர திலகர்

## பகுதிII

* முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. பின்வரும் கூற்றுக்களுடன் தொடர்புடைய இடங்களையும் அதற்குரிய ஆங்கில எழுத்துக்களையும் இலங்கைப்படத்தில் இனங்கண்டு i - vi வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.
   i. பிரித்தானியர் வந்திறங்கிய திருகோணமலைத் துறைமுகத்தினைக் குறிக்கும் எழுத்து.
   ii. கி.பி 1658 ஆம் ஆண்டு ஒல்லாந்தர் கைப்பற்றிய யாழ்ப்பாணத்தினைக் குறிக்கும் எழுத்து
   iii. கி.பி 1815 ஆம் ஆண்டு பிரித்தானியரால் கைப்பற்றப்பட்ட கண்டி இராச்சியத்தினைக் குறிக்கும் எழுத்து.
   iv. ஒல்லாந்தருக்கும் கண்டி மன்னனுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்படக் காரணமாக இருந்த நீர்கொழும்புக் கோட்டையைக் குறிக்கும் எழுத்து.
   v. தென்னைச் செய்கை பரவியிருந்த சிலாபத்தினைக் குறிக்கும் எழுத்து
   vi. சிவில்ராத் நீதிமன்றம் அமைக்கப்பட்ட காலியைக் குறிக்கும் எழுத்து

(2 x 6 = 12 புள்ளிகள்)



2.

i. கண்டி இராச்சிய மன்னர்களைச் சந்தித்த ஒல்லாந்து நாட்டு தூதுவர்கள் மூவரின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

ii. ஒல்லாந்தத் தூதுவர்கள் தொடர்புகளை ஏற்படுத்திய பின்வரும் ஆண்டுகளில் கண்டி இராச்சியத்தினை ஆட்சி செய்த மன்னர்களின் பெயர்களைத் தருக.
1. கி.பி 1602
2. கி.பி 1656
3. கி.பி 1721 (03 புள்ளிகள்)

iii. கி.பி 1638 ஆம் ஆண்டில் கண்டி மன்னனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள மூன்று விடயங்களைத் தருக (03 புள்ளிகள்)

iv. இரண்டாம் விமலதர்ம சூரியனும் ஒல்லாந்தரும் பின்பற்றிய நட்பு ரீதியான மூன்று தொடர்புகளைத் தருக. (03 புள்ளிகள்)

3.

(i) ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழிருந்த மூன்று கொமாண்டரிப் பிரதேசங்களையும் தருக. (03 புள்ளிகள்)

(ii) ஒல்லாந்த ஆளுநருக்கும் கொமாண்டர்களுக்கும் கீழிருந்த நிர்வாகப் பிரிவுகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

(iii) ஒல்லாந்தரின் ஆட்சியில் திசாவனியின் கீழிருந்த இரண்டு பிரிவுகளைத் தருக. (02 புள்ளிகள்)

(iv) ஒல்லாந்தர் கறுவா பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட நான்கு பிரதேசங்களைத் தருக. (04 புள்ளிகள்)

4.

(i) பிரித்தானியர் இலங்கை மீது கவனம் செலுத்துவதற்கு ஏதுவாக இருந்த மூன்று காரணிகளைத் தருக. (03 புள்ளிகள்)

(ii) இரட்டை ஆட்சி என்பதனால் நீர் கருதுவது யாது? (03 புள்ளிகள்)

(iii) கண்டிப் பிரதேசத்தில் சுதந்திரமான தனி அரசு ஒன்று இருப்பதைப் பிரித்தானியர் விரும்பாமைக்கான மூன்று காரணங்களைத் தருக. (03 புள்ளிகள்)

(iv) கி.பி 1803 ஆம் ஆண்டு கண்டி இராச்சியத்தைக் தாக்கிய பிரித்தானியப் படைகள் எதிர் நோக்கிய மூன்று பிரச்சினைகளைத் தருக. (03 புள்ளிகள்)

5.

(i) இலங்கையில் கடமையாற்றியபிரித்தானிய ஆளுநர்களில் பின்வரும் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களின் பெயர்களைத் தருக.

a. கி.பி 1855 இல் நீர்ப்பாசன நடவடிக்கை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக செயற்குழு ஒன்றை நியமித்தவர்.
b. பசவக்குளம், திசவாவி போன்ற குளங்களைப் புனரமைந்தவர்
c. வளவகங்கை, உடுகிரிவலவைப் பிரதேசத்தில் நீர்ப்பாசன அமைப்புக்களைப் புனரமைத்தவர்.

(ii) கி.பி 1818 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட முதலாவது சுதந்திரப் போராட்டத்திற்கான மூன்று காரணங்களைத் தருக. (03 புள்ளிகள்)

(iii) கி.பி 1818 ஆம் ஆண்டுப் போராட்டம் தோல்வி அடைந்தமைக்கான மூன்று காரணங்களைத் தருக. (03 புள்ளிகள்)

(iv) கி.பி 1818 ஆம் ஆண்டுப் போராட்டத்தின் விளைவுகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

6.

(i) இலங்கையில் சமய தேசிய மறுமலர்ச்சிக் காலத்தில் பௌத்த சமய மறுமலர்ச்சியில் ஈடுபட்ட மூவரின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

(ii) இந்து சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு முன்னின்று உழைத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமகநாவலர் அவர்களின் மூன்று பணிகளைத் தருக. (03 புள்ளிகள்)

(iii) எம்.சி சித்திலெப்பை இஸ்லாமிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்று தருக. (03 புள்ளிகள்)

(iv) ஐம்பெரும் விவாதங்கள் இடம்பெற்ற மூன்று இடங்களைத் தருக. (03 புள்ளிகள்)

7.

(i) கி.பி 1857 ஆம் ஆண்டு ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிராக இந்தியாவில் ஏற்பட்ட கலகம் எது? (02 புள்ளிகள்)

(ii) கலகம் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த நான்கு விடயங்களைத் தருக. (04புள்ளிகள்)

(iii) கலகம் தோல்வியடைந்தமைக்கான மூன்று காரணங்களைத் தருக. (03புள்ளிகள்)

(iv) இந்தியர்கள் மத்தியில் தேசிய உணர்வு வளர்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்திய மூன்று காரணிகளைத் தருக. (03 புள்ளிகள்)